# நாடகத் தமிழ்

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழில் கடைசியாக அமைவது நாடகம். நாடகத்தைப் 'பாமர மக்களின் பல்கலைக்கழகம்' என்பர். நாடக வேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள் பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பர். நாடகம் தொல்காப்பியர் காலத்திலேயே நடைமுறையில் உள்ளது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்' எனத் தொல்காப்பியம் உலகியல் வழக்கிற்கு மாறுபட்டதாக நாடகத்தைச் சுட்டும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும், நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் 'கூத்தாட் டவைக்குழாத் தற்றே' என நாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் நூல் சிலப்பதிகாரமாகும். சிலப்பதிகாரத்தில் வரும் அரங்கேற்று காதை நாடகமேடையிலிருந்து அதன் தன்மைகளையெல்லாம் விரிவாகச் சுட்டுகின்றது. நாடகம் நடிப்போர் இடம், பார்ப்போர் இடம், பக்கவாத்தியக் கருவிகள் இருக்குமிடம், திரைச் சீலைகளின் அமைப்பு எல்லாவற்றையும் இளங்கோவடிகள் சிலம்பில் நன்கு சுட்டுகின்றார். அடியார்க்கு நல்லார் உரை அக்காலத்தில் இருந்த பரதம், அகத்தியம், மதிவாணர் நாடகம், பரதசேனாதிபதியம் முதலிய நாடக நூல்களைச் சுட்டுகின்றது.

நாடகத்தை நடிக்க மட்டும், படிக்க மட்டும், நடிக்க படிக்க இரண்டிற்கும் என மூவகையாகப் பகுப்பர். மேலும் நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் இன்பியல், துன்பியல் என இரண்டு வகைப்படும். வேத்தியல், பொதுவியல் என நாடகத்தை இரண்டாய்ப் பகுக்கும் வழக்கமும் பண்டைநாளில் இருந்தது. உயர்ந்தோர் காண்பது வேத்தியலாகவும், இழிந்தோர் காண்பது பொதுவியலாகவும் கருதப்பட்டது. பொதுவியல் என்பதே பின் வந்தோரால் கூத்து என அழைக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் கிடைக்கும் முதல்நாடகம் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம். இது வடமொழியில் அமைந்தது. கோவில்கள் நாடகம் நடத்திடப் பிற்காலச் சோழர் காலத்தில் பயன்பட்டது. இராசராச சோழனைப் பற்றி இராஜராஜ விஜயம் என்னும் நாடகம் தஞ்சை பெரிய கோயிலில் நடந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. திருமூலநாயனார் நாடகம், பூம்புலியூர் நாடகம் நடத்தப்பட்டன. பூம்புலியூர் நாடகம் எழுதியமைக்குக் கமலாலய பட்டர் மன்னனிடம் நிவந்தம் பெற்றதைத் தென்னாற்காடு கல்வெட்டால் அறிகிறோம். திருவிழாக் காலங்களில் மகளிர் நாடகம் நடத்திட மானியம் அளிக்கப்பட்டமையைத் திருநெல்வேலி மாவட்டத்து ஸ்ரீவல்லிபுரத்துக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. குலோத்துங்க சோழ நாடகம் நடத்தப்பட்ட வரலாறும் உள்ளது. இவை பிற்காலச் சோழர் காலத்தில் நாடகத்தின் தன்மையை விளக்கும்.

பிற்காலப் பாண்டியர் காலத்தின் இறுதியில் முகமதியர் படையெடுப்பால் நாடகம் தன் செல்வாக்கை இழந்தது. பின்னர் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நாடகம்

புத்தாக்கம் பெற்றது. எனினும் 17,18ஆம் நூற்றாண்டுகளில் இசை வடிவில் குறவஞ்சி நாடகங்களும், நொண்டி நாடகங்களும் நடத்தப்பட்டன. தெருக்கூத்தே பெரும் அளவு நடத்தப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்க வரவேற்பு பெற்ற நாடகங்களாகும்.

19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல நாடகங்கள் அச்சேறின. சாதி பற்றிய நாடகங்கள் தோன்றின. ஒட்ட நாடகம் (கோவிந்த கவிராயர்) காராளர் கார் காத்த நாடகம் (கிருஷ்ண சாமி செட்டியார்) சோகி நாடகம் (சுப்பராயலு முதலியார்). இக்காலத்தில் தோன்றிய நாடோடிக் கதைகளின் சுவையான பகுதிகள் நாடகமாக்கப்பட்டன. தமிழகத்தில் வழங்கிய கதைகளைத் தழுவிச் சில நாடகங்கள் தோன்றின. அவற்றுள் ஆரவல்லி சூரவல்லி நாடகம், மதுரைவீரன் விலாசம் ஆகியன குறிப்பிடத்தக்கன. வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தேசிங்கு ராசன் கதை 'தேசிங்கு ராஜ விலாசம்' எனவும், சோழவரலாற்றை அடிப்படையாகக் கொண்ட கதை 'சோழ விலாசம்' எனவும் தலைப்பிட்டு நாடகமாகியது.

தஞ்சை சரபோஜி மன்னன் நாடகத்திற்குப் பெரிதும் ஊக்கமளித்தான். இம்மன்னன் காலத்தில் நாடகத்தில் உரைநடை மிகுதியும் இடம்பெற்றது. இராமாயணத்தின் பல்வேறு பகுதிகள் இக்காலத்தில் நாடகத்தின் கருப்பொருளாயின. பாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு கீசகவிலாசம், தரும விலாசம், பாரத விலாசம் போன்ற நாடகங்கள் தோன்றின. புகழேந்தி புலவரின் நளவெண்பா நளவிலாசம், தமயந்தி நாடகம் என அரங்கேறியது. பெரியபுராணமும் நாடகக் கோலம் பூண்டது. சிறுத்தொண்டர் விலாசம், திருநீலகண்டர் விலாசம் எழுந்தன. கந்தபுராணம் நாடகமாயிற்று. அப்பாவுப் பிள்ளை, காசி விசுவநாத முதலியார், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், தஞ்சை நவாப் கோவிந்தசாமி ராவ் ஆகியோர் குறிப்பிடத் தக்க நாடக ஆசிரியர்கள். மாரி முத்துப்பிள்ளையின் அநீதி நாடகம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது.

இக்காலத்தில் இந்து சமய நாடகம் என்றில்லாது இஸ்லாமிய நாடகங்களும் (அப்பாசு நாடகம், அல்லி பாதுஷா நாடகம்) கிருத்துவ நாடகங்களும் (ஞான சௌந்தரியம்மாள், ஞானத்தச்சன்) ஞானசௌந்தரியம்மாள் பின்னர் ஞானசௌந்தரி எனும் பெயரில் திரைப்படமாக வந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும் இந்நூற்றாண்டில் சேக்ஸ்பியர் நாடகங்கள் தமிழ்ப்படுத்தி நாடகமாக்கப்பட்டன.

மனோன்மணியம் எனும் நாடகக் காப்பியம் தோன்றியது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் இந்நாடகம் கதையைப் பொறுத்த அளவில் தழுவலே (லிட்டன் பிரபுவின் இரகசிய வழி எனும் நூல்) கவிதை நாடகமாகிய இந்நாடகம் உரைநடையாக்கிப் பலரால் நடிக்கப்பட்டது. பின்னர்த் திரைப்படமாகவும் வெளிவந்தது. இக்காலத்தில் பரிதிமாற் கலைஞர் தூயதமிழில் ரூபாவதி, கலாவதி, மானவிசயம் எனும் நாடகங்கள் எழுதினார்.

முன்னர்க் குறிப்பிட்ட நவாப் கோவிந்தசாமி ராவ் இன்றைய நாடகங்களுக்கு முன்னோடி எனலாம். தமிழ் நாடகத்தின் தாத்தா என்பர். இவரையடுத்து இத்துறையில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தியோர் சங்கரதாஸ் சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும்.

### தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் (1867 - 1922)

தமிழ் நாடகத்தின் தலைமையாசிரியர் எனப்போற்றப்படும் இவர் 40க்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். முதலில் நடிகராய் இருந்து ஆசிரியரானவர். அல்லி அர்ச்சுனா, அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, சதியனுசுயா, சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா முதலியவை குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். மிருச்சகடிகா எனும் வடமொழி நாடகம், சேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் ஆகிய நாடகங்களை மொழி பெயர்த்து மேடை ஏற்றியுள்ளார். நாடக உலகில் பெரிதும் மதிக்கப்படும் டி.கே.எஸ். சகோதரர்கள், பாடகர் எஸ்.கிட்டப்பா போன்றோர் இவரது சீடர்களே.

### பம்மல் சம்பந்த முதலியார்

சுகுணவிலாச சபையை 1891இல் நிறுவியவர். நாடகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தவர். 90க்கு மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். முதலில் பிறமொழித் தழுவல்களையே நாடகமாக்கினார். இவரது மனோகரா நாடகம் மிகச் சிறந்த படைப்பாகும். பின்னர் இது திரைப்படமாகவும் வெளிவந்து புகழ் பெற்றது. இவரது ரத்னாவளி, புஷ்பவல்லி, வேதாள உலகம், யயாதி, விஜயரங்கம் போன்றவை சிறந்த நாடகங்கள். இவரது நாடகங்கள் எள்ளல் சுவை மிக்கன. இவரைத் தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றுவர். இவரது பெருமை கருதி ஆங்கில அரசு ராவ்பகதூர் பட்டமும், இந்திய அரசு பத்மபூஷண் பட்டமும் கொடுத்துப் பாராட்டின. சர்.சி.பி. இராமசாமி ஐயர் இவர் நாடகத்தில் நடித்துள்ளார் என்பது பெருமைக்குரியதாகும்.

நாடகத்திற்குப் பெண்கள் வருவதே தவறெனக் கருதிய காலத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட பெண்களைச் சேர்த்து நாடகக் கம்பெனி நடத்திய பெருமைக்குரியவர் பாலாமணி அம்மையார். இவரது தாரா சசாங்கன் சிறப்பான நாடகமாகும். இக்காலத்தில் (1926) விபுலானந்த சுவாமிகள் நாடக இலக்கணநூல் எழுதினார். 1944இல் இந்தியாவிலேயே முதலாவதாக நாடகத்திற்கு மாநாடு தனியாக நடத்தப்பட்டது. விடுதலைக்கு முன்பே நாடகங்கள் தமிழில் தனிச் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டன. எஸ்.வி. சகஸ்ரநாமம் நாடகக்குழு ஆரம்பித்தது முதல் நாடகம் நன்கு வளரத் தொடங்கியது. நவாப் ராஜமாணிக்கம் நாடகத்துறைக்கு அரும்பணியாற்றியவர். 1933இல் மதுரை தேவி பாலவிநோத சங்கீத சபையை ஏற்படுத்தினார். கண்டிப்பானவர் எனும் பெயர் பெற்றவர். பல்வேறு பட்டங்கள் இவரைத் தேடிவந்தன. சம்பூர்ண ராமாயணம், கிருஷ்ணலீலா பலமுறை இவரது கம்பெனி நடத்திய நாடகங்கள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிறுவயதில் இந்நாடக மேடையில் பணியாற்றித் தம் நடிப்பை வளர்த்துக்கொண்டார்.

எம்.ஆர். ராதாவின் ரத்தக் கண்ணீர் நாடகம் சிறந்த பாராட்டைப் பெற்றது. நேஷனல் தியேட்டர்ஸ் மனோகர் பல்வேறு சமூக, புராண நாடகங்களை அரங்கேற்றினார். டி.கே.எஸ். சகோதரர்கள், அண்ணா, கலைஞர் கருணாநிதி, பி.எஸ். ராமையா, என்.எஸ். கிருஷ்ணன், சிவாஜி, சோ, கே.பாலச்சந்தர், தூரன், எஸ்.டி. சுந்தரம், அரு. ராமநாதன், மெரினா, பூர்ணம் விசுவநாதன், தா.ஏ. ஞானமூர்த்தி, மௌலி, கிரேஸிமோகன், சுந்தரம், விசு, எஸ்.வி.சேகர் எனப் பலரும் நாடகத்துறை வளர்ந்திடக் காரணமாயினர்.

இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு தலைப்புகளில் நாடகங்கள் நடத்தப்பட்டன. அவற்றுள் சிறப்பாகச் சில்வகைகளைக் காணலாம்.

### மொழி பெயர்ப்பு நாடகங்கள்

19ஆம் நூற்றாண்டு முதல் தமிழில் மொழி பெயர்ப்பு நாடகங்கள் தோன்றின. வடமொழி சாகுந்தலம், மிருச்ச கடிகா, சேக்ஸ்பியரின் நாடகங்கள் ஆகியவை மொழி பெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டன. சேக்ஸ்பியரின் மெர்ச்செண்ட் ஆஃப் வெனிஸ் வெனிஸ் வணிகன் என என். வேணு கோபாலாச் சாரியாரால் மொழிபெயர்க்கப்பட்டது. இத்தகைய மொழி பெயர்ப்பு நாடகங்களுக்கு இவர் முன்னோடி எனலாம்.

### விடுதலை இயக்க நாடகங்கள்

விடுதலையை மையமாக வைத்துப் பல நாடகங்கள் தோன்றின. வெள்ளையர் காலத்தில் தம் நாடகத்தில் வெள்ளையரைக் கேலி செய்து என்.எஸ். விஸ்வநாத தாஸ்

'கொக்கு பறக்குதடி பாப்பா - அதன்
குறிப்பை உணர்ந்து கொள்வாய் பாப்பா' என நாடக மேடையில் அஞ்சாது நின்று எதிர் குரல் கொடுத்தார். தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின் கதரின் வெற்றியும், பம்பாய் மெயிலும் சிறந்த விடுதலை இயக்க நாடகங்களாகும்.

### புராண நாடகங்கள்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புராண நாடகங்களே மிகுந்திருந்தன. நவாப் ராஜமாணிக்கமும், கன்னையா நாயுடும், பின்னர் ஆர்.எஸ். மனோகரும் மிகுதியான புராண நாடகங்களை அரங்கேற்றினர். ஆர்.எஸ். மனோகரின் புராண நாடகங்கள் காட்சியமைப்பில் பார்ப்போரைத் திகைக்கவைத்தன. மேலும் புராண எதிர்நிலைப் பாத்திரங்களை நல்லவர்களாகச் சித்தரித்தார் (இலங்கேஸ்வரன், இந்திரசித், சூரபதுமன்) முக்கிய புராண நாடகங்கள் தசாவதாரம், பகவத்கீதை, ராமதாஸ், பிரகலாதன், துருவன், நந்தனார், ஐயப்பன் முதலியனவாகும்.

### சரித்திர நாடகங்கள்

சமூக நாடகங்களை விடச் சரித்திர நாடகங்கள் அரங்கேற்றுவது பொருட் செலவு மிக்கதாகும். நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் புராண நாடகங்கள் போன்று சிறந்த சரித்திர நாடகங்களும் அரங்கேற்றியுள்ளார். காடக முத்தரையன், மாலிக்காபூர் குறிப்பிடத்தக்கன. அரு. ராமநாதனின் இராஜராஜ சோழன் சிறந்த நாடகம். சிவாஜி கணேசனின் வீரபாண்டிய கட்டபொம்மன், ஜஹாங்கீர், அண்ணாவின் பிரச்சார நாடகம் சந்திரமோகன், கலைஞரின் மணிமகுடம், தமிழ்வாணனின் புலித்தேவன் முதலியன.

### சமூக நாடகங்கள்

பம்மல் சம்பந்த முதலியார் காலம் முதல் சமூகச் சீர்திருத்த நாடகங்கள் மிகுதியாக அரங்கேறின. டி.கே.எஸ். சகோதரர்கள் மிகுதியான சமூக நாடகங்களை அரங்கேற்றினர். தி. ஜானகி ராமனின் வடிவேலு வாத்தியார், எஸ்.வி. சகஸ்ரநாமத்தின் நாடகங்கள், அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, நீதிதேவன் மயக்கம், கலைஞரின் மந்திரிகுமாரி, நச்சுப் பொய்கை, எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தின் சுமைதாங்கி, எம்.ஆர். ராதாவின் இரத்தக் கண்ணீர், லட்சுமி காந்தன், கே. பாலச் சந்தரின் நீர்க்குமிழி, சர்வர் சுந்தரம், எதிர் நீச்சல், சோவின் முகமது பின் துக்ளக், மனம் ஒரு குரங்கு, யாருக்கும் வெட்கமில்லை போன்றவை சமூக நாடகங்களாகவும், சீர்திருத்த நாடகங்களாகவும் அமைந்து மக்கள் வரவேற்பைப் பெற்றன. கலைவாணர் என்.எஸ். கேயின் நாடகங்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த நாடகங்கள்.

### இலக்கிய நாடகங்கள்

முதல் இலக்கிய நாடகம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம். பாரதிதாசனின் பிசிராந்தையார், சேரதாண்டவம், வ.சுப. மாணிக்கத்தின் நெல்லிக்கனி, மனைவியின் உரிமை, புலவர், குழந்தையின் காமஞ்சரி, பழநியின் அனிச்ச அடி பரிதிமாற் கலைஞரின் கலாவதி, மான விஜயம், கு. ராஜவேலுவின் அணை கடந்த வெள்ளம், சிங்கார வேலனின் வெள்ளி வீதி, ஊமைக்குயில், ஜசக் அருமை ராஜனின் முல்லை மாடம், அரங்கசாமியின் கனகை, அம்பாபலி கு.வெ. பால சுப்பிரமணியத்தின் கயற்கண்ணி, ஆறு அழகப்பனின் நாடகங்கள், அ.ச. ஞானசம்பந்தனின் தெள்ளாறு எறிந்த நந்தி முதலியன சிறந்த கவிதை நாடகங்களாக விளங்குகின்றன. நாஞ்சில் ஆனந்தனின் இந்திரசித் புதுக்கவிதையில் அமைந்த முதல் நாடகம். இவை தவிர உரைநடையில் இன்று நூற்றுக்கணக்கில் நாடகங்கள் வெளிவந்துள்ளன. இந்திரா பார்த்தசாரதியின் ஔரங்கசீப், இராமானுசர் இன் குலாபின் ஔவை போன்ற நாடகங்கள் பழைய வரலாற்றை எடுத்துக்கொண்டு புதுமை நோக்கில் ஆய்கின்றன. இவர்கள் தவிர அசோகமித்திரன், ச. கலியாணராமன், சுஜாதா, பிரபஞ்சன், பரசுராம் ராமமூர்த்தி, ஜெயகாந்தன், அம்பை, கரிச்சான் குஞ்சு, சுந்தர பாண்டியன், சிற்பி போன்றோர் புதுமையான நோக்கில் நாடகங்கள் படைத்து வருகின்றனர்.

### வீதி நாடகங்கள்

வீதி நாடகங்கள் எழுபதுகளில் மிகுதியாகத் தோன்றின. சென்னையைக் களமாய்க் கொண்டு அமைந்த நாடகங்கள் மிகுதி. மேடையின்றி, ஒப்பனையின்றி வீதியில் வரும் மக்களைக் கூட்டி வீதியில் நடத்தப்பட்டதால் இவை வீதி நாடகங்கள் எனப்பட்டன. இவை பெரும்பாலும் பகுத்தறிவு நாடகங்களாகவே இருந்தன. தீண்டாமையொழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்தல், குழந்தைத் தொழிலாளர்ப் பிரச்சினை, வர்க்கப் போராட்டம் இவைகளை மையமாய்க் கொண்டு எழுந்தன.

தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வீதி நாடகங்களின் வளர்ச்சிக்கு உதவியது.

## வட்டார மொழி நாடகங்கள்

அந்தந்த மாவட்ட வட்டார மொழிகளில் எழுதப்பட்ட இந்த நாடகங்கள் பெருமளவில் வெற்றி பெறவில்லை. மக்கள் இக்கால கட்டத்தில் செறிவான இலக்கிய மொழியையும் ஆதரிக்கவில்லை, கடுமையான வட்டார மொழிகளையும் ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வானொலி நாடகங்கள் தொலைக்காட்சி நாடகங்கள்

தொலைக்காட்சிக்கு முன்பு வரை வானொலி நாடகங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கின. பல வானொலி நாடக ஆசிரியர்கள் திரைப் படத்திலும் நுழைந்து புகழ் ஈட்டினர். வானொலி ஓரங்க நாடகங்களையும், தொடர் நாடகங்களையும் ஒலிபரப்பியது. வானொலி நாடகம் எழுதியோரில் சுத்தானந்தயோகி, துறைவன், சுகி, நாணல், திருச்சி. பேரா. சேஷாத்திரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுத்தானந்தபாரதி, பூரணம் விசுவநாதன், கோமதி சுவாமிநாதன், எஸ்.டி.சுந்தரம் போன்றோர் வானொலி நாடகத்திலிருந்து மேடை நாடகத்திற்கு வந்து சிறப்புப் பெற்றோர் எனலாம்.

தொலைக் காட்சி வந்ததும் வானொலி நாடகங்கள் செல்வாக்கினை இழக்க அந்த இடத்தை தொலைக்காட்சிகள் பிடித்துக் கொண்டன. பொதிகை, சன், விஜய், ஜெயா, ராஜ், கே.டி.வி எனப் பல தொலைக்காட்சி அலைவரிசைகள் போட்டி போட்டுக்கொண்டு நாடகங்களை ஒளிப்பரப்புகின்றன. அத்துடன் சில நாடகங்கள் பெண்களை தொலைக் காட்சிப் பெட்டி முன் கட்டிப்போட்டு விடுகின்றன.

தொலைக்காட்சி நாடகத்தின் ஆதிக்கம் அந்த அளவு வளர்ந்துள்ளது. இது நாடகத்தின் வளர்ச்சி என்பதைவிட மக்களின் உழைப்பை முடக்கி விடும் என்பது உண்மையாகும்.

திரைப்படம் ஆதிக்கம் செலுத்திய பிறகும் தமிழ்நாட்டில் வீதிநாடகம், பரீக்ஷா, தெருமுனைக் கூத்து, தேடல், விடிவெள்ளி எனப்பல நாடக அமைப்புகள் இயங்கி வந்தன. அவை இன்றைய போட்டி உலகில் தொடர்ந்து காலூன்ற இயலாது பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

## சோதனை நாடகங்கள்

வானொலியும், தொலைக்காட்சியும் மக்களுக்கு நன்மை தரும் நாடகங்களை அளித்து தொண்டு செய்ய வேண்டும். இத்தகையப் போட்டிகளுக்கிடையே புதிய சிந்தனைகளின் வெளிப்பாடாய் வெளிவரும் சோதனை நாடகங்கள் பெரும் சோதனைகளைச் சந்திக்கின்றன. இந்திராபார்த்த சாரதியின் 'நந்தன் கதை,' ந.முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்', பிரபஞ்சனின் 'முட்டை', ச. முருகபூபதியின் 'தனித்திருக்கப்பட்டவர்கள்' சே.இராமானுசத்தின் 'வெறியாட்டம்' ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். எனினும் வெளிநாடுகளில் வெற்றி பெற்ற அளவிற்குச் சோதனை நாடகங்கள் தமிழில் வெற்றி பெறவில்லை.